**JUDICIAL MAGISTRATE COURT NO.I CHENGALPATTU**

**CC No.845/2022**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.I CHENGALPATTU. |
| Deposition of witness for | : LW -6 /PW- 6 |
| Name | : திரு. ராஜ்குமார் |
| Father/Husband's Name | : துரைசாமி |
| Village | : நெ.2/151 ஏ, போலிஸ் ஸ்டேசன் தெரு |
| Taluk | : சட்ராஸ் |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 39 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 09.02.2026.

Accused present.

**முதல் விசாரணை–**

நான் தற்போது சட்ராஸிசில் வசித்து BSNL நிறுவனத்தில் Subdivision இன்ஜினியராக பணிபுரிந்து வருகிறேன். நான் BSNL நிறுவனத்தில் Subdivision இன்ஜினியராக 2017 ல் பணிபுரிந்து வந்தேன். அப்போது கல்பாக்கம் டவுன்சிப்பில் BSNL connection கொடுப்பதற்காக நியூவிசன் என்ற நிறுவனம் தான் எங்களுடைய வெண்டார். சைபர் கிரைம் ஆய்வாளர் என்னை விசாரித்து இவ்வழக்கு சம்மந்தமாக மோடம் கைப்பற்ற வேண்டி கூறினார். நாங்கள் வனஜா என்ற பெயரில் அந்த மோடத்திற்கு connection கொடுத்திருந்தோம். எங்களிடம் இந்த வழக்கு சம்மந்தப்பட்ட மோடம் கேட்டார்கள் நாங்கள் கொடுத்தோம்.

சாட்சியிடம் இவ்வழக்கில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மோடம் காண்பிக்கப்பட்டது. சாட்சி அதனை பார்த்துவிட்டு தான் கொடுத்ததாக கூறுகிறார். **மேற்படி மோடம் சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னிடம் விசாரணையின் போது கேட்டு கொண்டதன் பேரில் மோடம் யார் பெயரில் இருப்பதற்கான விண்ணப்பத்தினை

கொடுத்தேன். நான் அதை கொடுக்கும் போது என்னுடன் குமரேசன் என்பவரும் இருந்தார். நாங்கள் இருவரும் சேர்ந்து விண்ணபத்தினை கொடுத்தோம்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை–**

இவ்வழக்கு சா.பொ.1 னை போலிசாரிடம் ஒப்படைத்தேன் என்று தவறாக கூறுகிறேன் என்று சொன்னால் நான் கொடுக்கவில்லை நியூவிசன் தான் போலிசாரிடம் கொடுத்தார்கள். ஒரு மோடத்தின் ரீசெட் பட்டனை அழுத்தினால் அதிலுள்ள தகவல்கள் அழிந்துவிடும் என்று சொன்னால் Username, Password மட்டும் தான் அழிந்துவிடும். BSNL நிறுவனத்தின் வெண்டார் நியூவிசனுக்கும் தான் எங்களுக்கும் தான் நேரடி தொடர்பு என்றால் சரிதான். நான் போலிஸ் விசாரணையில் வனஜாவின் மோடம் மற்றும் விண்ணப்பத்தை கொடுத்த விவரத்தை போலிசாரிடம் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். நான் அவ்வாறு கூறவில்லை தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் போலிசார் சொல்லி கொடுத்ததன் பேரில் நடக்காத சம்பவத்தை நடந்ததாக கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை–** இல்லை.

Sd.xxx

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd.xxx V.Lavanya,
Judicial Magistrate No.I,
Chengalpattu.

**JUDICIAL MAGISTRATE COURT NO.I CHENGALPATTU**

**CC No. 845/2022**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.I CHENGALPATTU. |
| Deposition of witness for | : LW -7 /PW-7 |
| Name | : திரு. குமரேசன் |
| Father/Husband's Name | : துரைராஜ் |
| Village | : எப்1, ஜெயராமன் லஷ்மி அபாரட்டமெண்ட், தளபதி ஸ்டாலின் 2 வது தெரு |
| Taluk | : சந்தோஷபுரம் |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 64 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 09.02.2026.

Accused present.

**முதல் விசாரணை–**

நான் தற்போது சந்தோஷபுரத்தில் வசித்து வருகிறேன். நான் கல்பாக்கம் நியூவிசனில் கேபிள்டிவி மற்றும் இன்டர்நெட் connection இன்சார்ஜ் ஆக பணிபுரிந்த பணி ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 15.06.2022 அன்று நேரம் சரியாக நினைவில்லை மோடம் சீஸ் செய்வதற்காக சைபர் கிரைம் போலிசார் வந்தார்கள். அந்த மோடம் கேட்டார்கள் அந்த மோடம் வனஜா என்ற பெயரில் இருந்தது. நாங்கள் அந்த மோடத்தை அவர்களிடம் சரண்டர் செய்தோம். வனஜா என்ற பெயரில் அந்த மோடம் இருந்தது என்பதனை ஆவணத்தின்அடிப்படையில் தெரிந்து கொண்டேன்.

சாட்சியிடம் மோடம் காண்பிக்கப்பட்டது. அந்த மோடம் தான் போலிசாரிடம் கொடுத்தது என்று கூறுகிறார். நான் மேற்படி சான்று பொருளினை நியூவிசன் அலுவலகத்திடம் வைத்து ஒப்படைத்தேன். போலிசார் இது சம்மந்தமாக என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை–**

நியூவிசன் நிறுவனத்தார் தான் இன்டர்நெட் connection ஒவ்வொரு வீட்டிலும் போடுவார்கள் என்றால் சரிதான். நாங்கள் தான் அந்த மோடத்தை configur செய்தோம் என்றால் சரிதான். யார் யாருக்கு மோடம் கொடுக்கப்பட்டது என்ற விவரத்தை பதிவேடுகளில் பதிவு செய்யப்பட்டிருக்கும் என்றால் சரிதான். எங்களிடம் password கொடுப்பதற்கு ஒரு App உள்ளது அதை பார்த்தால் அந்த மோடத்தின் உரிமையாளரின் password என்னவென்பதை தெரிந்து கொள்ளலாம். எங்களுக்கு அப்போதைய தலைமை அதிகாரி மனோகரன் என்றால் சரிதான். அந்த மனோகரன் நியூவிசன் தலைமை என்ற முறையில் எங்கள் அலுவலகத்திற்கு எப்போது வேண்டுமானாலும் வந்து செல்லலாம் என்றால் சரிதான். எங்கள் அலுவலம் வனஜா வீட்டிற்கு பின்புறத்தில் உள்ளது என்று சொன்னால் சரிதான்.

வழக்கு சம்பவ காலத்தில் Alphion – AONT 1143 என்ற மோடம் அனைவருக்கும் வழங்கப்பட்டது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்பட்ட சா.பொ. 1 மோடம் யாருக்கு கொடுக்கப்பட்டது என்பதை தெரிந்து கொள்வதற்கு பதிவேட்டை பார்த்தால் தெரியும் என்றால் சரிதான். போலிசார் விசாரணையின் போது நான் வனஜா என்பவருக்கு மோடம் வழங்கப்பட்டதாக கூறினேனா என்று கேட்டால் கூறினேன். நான் அவ்வாறு கூறவில்லையென்றாலும், அந்த மோடத்திற்கும் வனஜாவிற்கும் சம்மந்தம் இல்லை என்றாலும் சரியல்ல. நான் போலிசாருக்கு பவ்யப்பட்டு பொய் சாட்சி அளிக்கிறேன் என்று சொன்னால் சரயில்ல.

**மறுவிசாரணை–** இல்லை.

Sd.xxx

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd.xxx V.Lavanya,
Judicial Magistrate No.I,
Chengalpattu.